பிடபெத்தர பிரதேச சபை - 2024
----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிடபெத்தர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பிடபெத்தர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது மக்கள் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 0.1 மில்லியனிற்கான தொகை மீளளிப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும், அந்தத் தொகையினை பெற வேண்டிய மீதியொன்றென பதிவு செய்திருக்கவில்லை.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என.	மீளளிப்பு செய்ய வேண்டிய தொகை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	ஆயுர்வேத மருந்து இருப்புக்களின் பெறுமதி ரூபா 53,771 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.	ஏதிர் காலத்தில் சரியான மீதியொன்று காட்டப்பட்டு அறிக்கை தயாரிக்கப்படும் என.	மருந்து பதிவேடு மற்றும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி சரியான மீதி நிதிக்கூற்றுக்களில் இருப்பு மீதியென காட்டப்பட வேண்டும்.

			குறைவாக காட்டப்பட்டிருந்த மீதிகள் மருந்து இருப்புக் கணக்கில் சீராக்கல் செய்ய வேண்டும்.
(இ)	பிரதேச சபை கேட்போர்கூட திருத்த வேலையின் போது வர்ணம் பூசுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 0.58 மில்லியன் தொகை மீண்டுவரும் செலவுகள் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.	அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு 2025 கணக்குகளில் சரி செய்யப்படும் என.	மூலதனப்படுத்தியிருந்த ரூபா 0.58 மில்லியன் தொகை காணி கட்டிடக் கணக்கிலிருந்து அகற்றப்பட வேண்டும்.
(ஈ)	சபைக்குச் சொந்தமான ரூபா 0.25 மில்லியனிற்கான 11 நீர் தொட்டிகளின் பெறுமதி நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் நீர் களஞ்சிய இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் நீர் களஞ்சிய இருப்புக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டுள்ளது என.	11 நீர்த் தொட்டிகளின் பெறுமதி நீர்க் களஞ்சிய இருப்புக்களில் இருந்து அகற்றப்பட்டு உபகரணக் கணக்குகள் சீராக்கல் செய்ய வேண்டும்.
(உ)	பெற வேண்டிய ரூபா 0.15 மில்லியனிற்கான அறிவித்தல் பலகை கட்டண வருமானம் பெற வேண்டிய வருமானம் ஒன்று என கணக்கீடு செய்திருக்கவில்லை.	பணமாக பெறுகின்ற அறிவித்தல் பலகைக் கட்டணம் மாத்திரம் சிட்டையிடப்பட்டுவதுடன், நிலுவைத் தொகை கணக்குகளில் காட்டப்படுவதில்லை என.	ஆண்டிற்குரிய மொத்த அறிவித்தல் பலகை வருமானம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான கூற்று மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டு மீதிகளிடையே ரூபா 0.24 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	2025 நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளப்படும் என.	நிதிக்கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கையிடையே வித்தியாசத்தை கண்டறிந்து அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132(ஓ)	இந்தப் பிரிவிற்கு இணக்கமின்றி மூன்று நாட்கள் கல்விச் சுற்றுலாவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 0.33 மில்லியனிற்கான செலவுவொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.	செயற்திட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிதிக் குழுவின் அங்கீகரத்தின் மீது செலவு மேற்கொள்ளப்பட்டது எனவும் மற்றும் ஆளுனரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை எனவும்.	பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 14.53 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14.16 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீட்டு வருமானம்	2024 சிட்டையிடப்பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பீட்டு வருமானம்	2023 சிட்டையிடப்பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i) வீதவரி மற்றும் வரி	1,567,955	2,218,500	2,224,325	892,888	1,696,000	1,763,365	2,564,981	898,713
(ii) வாடகை	5,408,546	8,999,200	9,013,736	2,944,826	23,048,240	17,098,748	16,848,183	2,959,362
(iii) அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,527,425	1,451,777	1,460,177	98,522	1,155,100	1,182,576	1,147,176	106,922
(iv) ஏனைய வருமானங்கள்	3,798,000	7,076,993	6,912,806	573,570	2,846,500	5,051,973	4,899,596	409,383
	12,301,926	19,746,470	19,611,044	4,509,806	28,745,840	25,096,662	25,459,936	4,374,380

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் முன்னேற்றப்பட்ட பிரதேசம் என 2021 ஆண்டில் இனங்கண்டிருந்த 1480 வீதவரி அலகுகளில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விலை மதிப்பீட்டு திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விரைவாக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடமாடும் பதிவேடு 2025 பெப்ரவரி 19 திகதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என.	விரைவாக ஆதன பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 0.31 மில்லியனிற்கான ஏக்கர் வரி நிலுவை மீதியில் ரூபா 0.30 மில்லியன் தொகை 03	நீண்ட கால நிலுவைத் தொகையில் ரூபா 101,427 தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரின்	நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டதுடன், அது மொத்த நிலுவைத் தொகையில் 99 சதவீதத்தை கொண்டிருந்தது.	அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மீதியான நிலுவைத் தொகைக்காக கிராம உத்தியோகத்தர்களிடம் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது என.	
(iii)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 0.45 மில்லியன் குப்பை வரி வருமானத்தில் ரூபா 0.36 மில்லியன் தொகை மீதிகள் 03 வருடங்களை மிகைத்திருந்ததுடன், அது மொத்த நிலுவைத் தொகையில் 81 சதவீதமாக காணப்பட்டது.	நீண்ட காலமாக காணப்படுகின்ற நிலுவையை பதிவழிப்பதற்கு தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது என.	நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) வாடகை

(i)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 60 கடையறைகளில் ரூபா 2 மில்லியனிற்கான கடை வாடகை நிலுவையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 1.74 மில்லியன் 03 வருட காலத்தை மிகைத்திருந்தது.	2025 ஏப்ரல் 20 அளவில் ரூபா 454,330 தொகை அறவிடப்பட்டுள்ளது என.	நிலுவை கடையறை வாடகை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	சபையினால் வாடகைக்கு கொடுத்திருந்த 42 கடையறைகளின் உடன்படிக்கை காலவதியாகியிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரை அந்த உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	42 கடையறைகளில் 20 கடையறைகளின் உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது என.	காலவதியாகிய அனைத்து உடன்படிக்கைகளையும் நாளதுவரையாக்கப்பட வேண்டும்.

(இ) ஏனைய வருமானங்கள்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 0.33 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8.93 மில்லியன் தொகை காணப்பட்டது.	நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 0.87 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 11.76 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது என.	அனைத்து நிலுவைத் தொகைகளும் விரைவாக அறவிடப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற சுமார் 01 தொன் குப்பை இருப்பை அப்புறப்டுத்துவதற்காக நிரந்தர மற்றும் முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தாமல் மனிதர்கள் செறிந்து வாழும் மற்றும் பிரதான நீர் மூலவளமாகிய நில்வளா கங்கைக்கு அண்மையில் அமைந்துள்ள மொரவக சந்தைக்கு பின்பக்கமாக குவிக்கப்படுவதனால் நில்வளா கங்கையின் நீர் அசுத்தப்படல் மற்றும் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டது.	சபைக்கு சேதனப் பசளை செயற்களமொன்று காணப்படாமையால் சபைக்கு சொந்தமான வனசிங்ககந்த காணியில் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்று செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	குப்பை அப்புறப்படுத்துவதற்கு முறையான மற்றும் நிரந்தர வேலைத் திட்டமொன்று விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	சேதனப் பசளை செயற்திட்டமொன்று செயற்படுத்துவதற்காக வனசிங்க கந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் 20 ஏக்கர் காணியொன்று உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக அறிவுறுத்தி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என.	குப்பை அப்புறப்படுத்துவதற்கு முறையான மற்றும் நிரந்தர வேலைத் திட்டமொன்று விரைவாக செயற்படுத்த வேண்டும்.
(இ)	மொரவக நீர் செயற்திட்டத்திற்குரிய நீர் மூலவளம் கொடபொல பிரதேச சபைக்கு உரித்தாகுவதனால் கொடபொல மாதாந்த நீர் நுகர்வுப் பெறுவனவுகளில் இருந்து 20 சதவீதம் கொட்டபொல பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக கொடபொல பிரதேச சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. இந்த நீர் மூலவளம் இரண்டு பிரதேச	எதிர் காலத்தில் உடன்படிக்கை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	கொடபொல பிரதேச சபையுடன் உடன்டிக்கை மேற்கொண்டு பொது மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கான முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும்.

சபைகளினாலும் அபிவிருத்தி செய்யாமையால் மிகை மழை காலத்தில் சேறு நீருடன் கலத்தல், நீர் குழாய் உடைவதனால் நீர் தடை ஏற்படுதல், நீருடன் மணல் கலந்து வருவதனால் நீர் மானிகள் செயற்படாமை, நீர் முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் நுகர்வோரிடம் பெற்றுக்கொள்ளும் வைப்புத் தொகைக தொடர்பாக கவனம் செலுத்தி நிலுவை நீர் பில்பத்திரம் அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமையால் 2025 ஜனவரி 24 கணக்காய்வுத் திகதி அளவிலும் வீடுசார் நீர் நுகர்வு நிலுவை ரூபா 0.26 மில்லியன் மற்றும் வாணிப நீர் நுகர்வு நிலுவை ரூபா 0.26 மில்லியன் தொகையாக இருந்தது.	ரூபா 573,570 இற்கான நிலுவைத் தொகையில் ரூபா 274,518 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், மீதியான நிலுவை மீதி ரூபா 299,052 இற்கான தொகையொன்று விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க்ப்படும் என.	நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், வைப்புத் தொகையை மிகைக்க முன்னர் நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் மொரவக சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு குழாய் கிணறுகளின் நீர் மிகை இரும்புச் செறிவுடனாக காணப்பட்டதால் நுகர்வோருக்கு பொருத்தமற்ற நிலைமையில் காணப்பட்ட போதிலும், அந்த நீரை சுத்தம் செய்வதற்காக எதுவித வேலைத் திட்டமும் தயாரிக்கப்படாமல் 2021 ஆண்டில் தென் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாகாண குறிதொதுக்கிய ஏற்பாடுகளின் மீது ரூபா 1.03 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்து நீர் களஞ்சியத் தொட்டி மீளாய்வாண்டு இறுதியளவிலும் விளைவற்ற நிலையை அடைந்திருந்தது.	மொரவக பஸ் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கிணறு அகற்றப்பட்டுள்ளதுடன், சந்தை வளவில் காணப்பட்ட கிணறு மீதியாக உள்ளது எனவும், கிணற்றின் நீரை சுத்தம் செய்வதற்காக கூடிய செலவொன்று மேற்கொள்ள நேரட்டுள்ளதால் இந்த செயற்திட்டம் விளைவற்று காணப்படுகின்றது என.	செயற்திட்டங்கள் திட்டமிடும் போது சரியான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டங்கள் செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாத காரணத்தினால் செயற்திட்டத்தை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறன்றேல், செயற்படுத்திய தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(இ)	2022 திசெம்பர் 15 திகதிய 2022/01 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கையின் படி அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் பொது மக்களுக்காக வழங்கப்படுகின்ற சேவைகளை இலகுவாக்குதல், செயற்திறனாக்குதல் மற்றும் வருமானம் விரைவாக சேகரிப்பதற்காக நிகழ்வு நிலை முறைமையை அறிமுகப்படுத்துவது கட்டாயமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும், இணைய தளமொன்று உருவாக்கி நிகழ்வு நிலை கொடுப்பனவு வசதிகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இணையதளமொன்று நிர்மாணிப்பதற்காக நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு உடன்படிக்கையொன்று மேற்கொண்டு இணைய தளமொன்று நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என.	இணையதளமொன்று நிர்மாணித்து நிகழ்வு நிலையில் கொடுப்பனவு செய்வதற்குரிய வசதிகள் விரைவாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

3.3 செயற்பாடடுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது விற்பனை செய்திருந்த 05 காணித் துண்டுகளுக்காக 1987 இன் 15 ஆம் பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 154(1) இன் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 90,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.	பகிரங்க ஏலவிற்பனை அல்லது வேறு ஏதேனும் முறையில் விற்பனை செய்யப்பட்ட காணிகள் அல்ல எனவும், தனிப்பட்ட காணிகள் தொடர்பாக காணிகளை துணைப் பகிர்வு சபையினால் அங்கீகரிக்கும் போது விற்பனைப் பெறுமதியின் 01 சதவீதத்தை அறவீடு செய்வதற்கான அறிவுரை வழங்கும் படி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏலவிற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரின் உதவியாளரினால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யும் சந்தர்ப்பத்தில் 01 சதவீத வரி அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுகின்ற 08 நிறுவனங்களின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த போதிலும், அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு சபையினால் நடைவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், 09 வர்த்தக நிலையங்களினால் அனுமதிப்பத்திரம்	அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தேவையான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதெனவும் 02 மற்றும் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களுக்கும் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவ்வாறு இன்றேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட

பெற்றுக்கொள்ளாமையினால கூட்டுத்தொகை ரூபா 40,500 தொகைக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிக் கட்டணத்தை சபை இழந்துள்ளது.	எனவும்.	வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற சுமார் 12 ஏக்கர் அளவான 17 காணித் துண்டுகள், காணியின் அளவு காணப்படாத 04 காணித் துண்டுகள் தொடர்பாக சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணியின் உரிமை காணப்படும் பிரதேச செயலாளரிடம் உரிமைகள் உரித்தாக்கித் தரும்படி வேண்டப்பட்டுள்ளது என.	சட்ட ரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு உறுதிகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	06 காணித் துண்டுகள் தொடர்பாக பொறுத்தமான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக சபையினால் மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்காமையால் அந்தக் காணிகள் விளைவற்று காணப்பட்டது.	எதிர் காலத்தில் ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	காணிகளில் பொருத்தமான செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆளணித் திட்டத்தின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 14 பதவிகள் மிகையாக காணப்பட்டது.	2025 ஆண்டில் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பதவியணி ஒன்றின் தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்து அதன்படி பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2011 ஆண்டிற்கும் 2023 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 05 உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 0.29 மில்லியனிற்கான கடன்மீதி மீளாய்ாவண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை.	நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என.	நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	சபையின் ஆரம்ப தர 14 தொழிலாளர்களுக்கு பதவிக்கு உரித்தில்லாத ஏனைய கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், 2024 ஆண்டில் ரூபா 7.92 மில்லியன் தொகை சம்பளம் மற்றும் படிகளாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.	ஏனைய கடமைகளில் ஈடுபடுத்திய போதிலும் நிரந்தரப் பதவிகளின் சம்பளம் வழங்களப்படுகின்றதெனவும், அங்கீகரிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை போதியளவாக காணப்படாமையால் சுகாதார மற்றும் வேலை வெளிக்கள தொழிலாளர்கள் சாரதிகளை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றது என.	பதவியணி ஆட்சேர்க்கும் போது உள்ளவாறான தேவைப்பாடு தொடர்பாக சரியாக இனங்காண வேண்டியதுடன், உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட பதவிக்குரிய கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும்.